பெருந்தோட்ட மற்றும்
சமூக உட்கட்டமைப்பு அமைச்சு

# தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் தற்போது வெற்றிடமாக உள்ள கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகள் தொடர்பில் சிறந்த அனுபவம் மற்றும் தேவையான தகைமைகளை பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

பதவி – நிகழ்ச்சிமுறை உதவியாளர் (தரக் கட்டுப்பாடு)

**வெற்றிடங்களின் எண்ணிக்கை** 05

**சேவை பிரிவு:** இணை உத்தியோகத்தர்- **(MA-3)**

**சம்பள அளவு:** ரூபா 32,200/-,10x445/-,11x660/-,10 x 730/-,5x750/-= Rs.54,960/-(MA 3-2016) (மாதாந்தம்) + அனுமதிக்கப்பட்ட அரச கொடுப்பனவுகள்

**அடிப்படைச் சம்பளம் படி:** ரூபா 32,200/-

**கல்வி தகைமைகள்:**

இரசாயனவியல், நுண்ணுயிரியல், உயிர் இரசாயனவியல் மற்றும் தாவரவியல் துறைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

**வயது:**

விண்ணப்ப முடிவுத் திகதியில் விண்ணப்பதாரர்கள் 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரச திணைக்களம்/ மாகாண அரசு/ அரச கூட்டுத்தாபனங்கள்/ சட்டரீதியான சபைகள் மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் நிரந்தர சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

ஆட்சேர்ப்பு முறை: எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது ஒரு கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

**ஏனையவை**

**மேலுள்ள பதவிகளுக்கானது**

i. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. நாட்டின் எந்தப் பகுதியில் பணியமர்த்தப்பட்டாலும் அந்தப் பணியை சிறந்த முறையில் மேற்கொள்வதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகைமை இருத்தல் வேண்டும்.
iii. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

**நன்மைகள்**

1. 1983 இன் 12 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் பணிக்கொடை
2. மருத்துவ காப்புறுதித் திட்டம் மற்றும் தனிப்பட்ட விபத்து காப்புறுதித் திட்டம்/ தொழிலாளர் இழப்பீட்டு காப்புறுதித் திட்டத்திற்கு உட்பட்டது.
3. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) ஊழியர் 10% மற்றும் தொழில்வழங்குநர் 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு (ETF) தொழில்வழங்குநர் மூலம் 3% பங்களிப்புச் செய்யப்படும்.
4. ஊழியர்களுக்கு பொருந்துகின்ற நிர்வாகத்தின் உபரிச் சலுகைகள்.

பிறப்புச்சான்றிதழின் பிரதி, கல்வி, தொழில்முறை மற்றும் சேவை சான்றிதழ்களுடன் விண்ணப்பதாரரின் தற்போதைய தொழில், சம்பள விபரங்கள், முன்னர் வகித்த பதவிகள் மற்றும் உறவினர் அல்லாத நடுவரின் பெயர் மற்றும் முகவரி மற்றும் விண்ணப்பதாரர்களின் ஏனைய அனைத்து விபரங்களையும் ஒன்றிணைத்த அபேட்சகர்களின் விண்ணப்பத்தை 2025.02.07 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

அரச திணைக்களம்/ மாகாண அரச சேவை/ அரச கூட்டுத்தாபனங்கள்/ சட்டரீதியான சபைகளைச் சேர்ந்த ஊழியர்களின் விண்ணப்பங்கள் குறித்த நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும் என்பதோடு தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் ஏற்கனவே நிரந்தர சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அதிகாரசபையின் குறித்த பிரிவுத் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் அல்லது கையொப்பமிடாத விண்ணப்பங்கள் அல்லது மேல் குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அல்லது திணைக்களங்கள்/ நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

www.cda.gov.lk என்ற இணையதள முகவரியில் இருந்து இந்த விளம்பரத்தை தரவிறக்கம் செய்யலாம்.

**தலைவர்**
**தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை**
**இல. 54, நாவல வீதி,**
**நாராஹென்பிட்ட**
**கொழும்பு 05.**